முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1578

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**24.01.2024,** புதன்கிழமை

1. தர்ம சக்தியே அரங்கா வாழ்க
   தவசித்திமிகு தேசிகா வாழ்க
   பெருமைமிக்க ஞான உலகம் படைக்க
   பிரணவக் குடில் படைத்த அரங்கனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் தை மாதம் 10 ம் நாள், 24.01.2024, புதன்கிழமை)
   ஊழ் போக்கி உலகோர்க்கு ஞானம் அருளுகின்ற
   உயர் ஞானியாய் வந்த அரங்கனே
3. அரங்கனே உன் அவதாரம் இந்த கலியுகத்தில்
   ஆறுமுகன் என் வெளிப்பாடாகவும்
   இந்த உலகத்துக்கு ஞான ஆட்சித் தரக்கூடிய வல்லமையாகவும்
   அளவிலா ஞானிகளை படைத்து
4. ஞானலோகமாக்கி இந்த உலகிலே
   ஞான சித்தர் காலத்தை உருவாக்கி இனிதே
   ஞானிகள் ஆட்சியும் ஞானவான்கள் ஆட்சியுமாக
   நடந்தேற உயர்சேவை ஆற்றுகின்ற அரங்கனே
5. ஐயனே உந்தனுக்கு சுப்ரமணியர் யான் மகா சக்தியாய் இருக்க
   சிந்தைபட உன் தடம் வருகின்ற அன்பர்கள் அனைவரும்
   சித்திமிகு ஞானிகளாக இந்த கலியுகத்தில் மாற்றங்கண்டு
   விந்தைபட அவர்களெல்லாம் உலகை மாற்றும் மகா சக்திகளாக
6. வேலவன் எனைக் காணும் உயர்மாந்தர்களாக
   ஆற்றல்பெருகி இந்த கலியிலே
   அரங்கன் உன் அவதார நோக்கம் பூர்த்தியாகும்
   அருளிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–